FWC

**யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

**Field Work Centre**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2016**
**Term Examination, March - 2016**

| தரம் :- 13 (2016) | கிறிஸ்தவம் – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ **பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

## பகுதி - I

01) (i) ஐந்நூலின் முக்கிய கருத்துக்கள் நான்கு தருக.

(ii) இறைஏவுதல் இறைவனின் கொடை என்பதற்கு நான்கு எடுத்துக்காட்டுக்கள் தருக.

(iii) இணைத் திருமுறை நூல்கள் நான்கு தருக.

(iv) விடுதலைப் பயணத்தோடு தொடர்புடைய முக்கிய சம்பவங்கள் நான்கு தருக.

(v) நீதித் தலைவர்கள் நால்வரின் பெயர்களைத் தருக.

($5 \times 4 = 20$ புள்ளிகள்)

02) (i) யாவே (J) பாரம்பரியத்தின் அமைப்பு முறைகள் நான்கு தருக.

(ii) உண்மை இறைவாக்கினரை இனங்காண்பதற்கான அளவு கோள்கள் நான்கு தருக.

(iii) இறைவாக்கினரின் அழைப்பின் பொதுவான பண்புகள் நான்கு தருக.

(iv) இறையரசின் அடையாளங்கள் புதுமைகள். யேசுவின் புதுமைகளின் இயல்புகள் நான்கு தருக.

(v) மாற்கு நற்செய்தியாளர் “கிறிஸ்து யூதரின் அரசர்” என வெளிப்படுத்தும் முக்கிய நான்கு சம்பவங்களைக் குறிப்பிடுக.

($5 \times 4 = 20$ புள்ளிகள்)

03) (i) உயிர்த்த யேசு காட்சி கொடுத்த நான்கு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

(ii) எருசலேம் பொதுச் சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நான்கு தருக.

(iii) தூய பவுல் இரண்டாம் தூதுரைப் பயணத்தின் போது தரிசித்த இடங்கள் நான்கு தருக.

(iv) ஆரம்ப காலங்களில் நடைபெற்ற திருச்சங்கங்கள் நான்கு தருக.

(v) இலத்தீன் சபைத் தந்தையர்கள் நால்வரின் பெயர்களைத் தருக. ($5 \times 4 = 20$ புள்ளிகள்)

## பகுதி - II

04) அ) பெந்தக்கோஸ்து தினத்தன்று தூயாவியின் வருகை பற்றி விளக்குக.

ஆ) தூய ஆவியைப் பெற்றுக் கொண்ட திருத்தூதர் செயற்பட்ட விதத்தைக் குறிப்பிட்டு, தூய ஆவியை பெற்றுக் கொண்ட நீரும் எவ்வாறு செயற்படுவீர் என விளக்குக.

($2 \times 10 = 20$ புள்ளிகள்)

05) அ) செங்கடலைக் கடத்தல் தொடர்பாக நிலவும் பல்வேறு கருத்துக்களில் ஐந்து காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

ஆ) ஈசாக்கை பலியிடச் சென்ற நிகழ்வின் வழியாக உமது வாழ்வுக்கு கிடைக்கும் செய்தியினை 5 காரணிகளின் துணையுடன் விளக்குக.

($2 \times 10 = 20$ புள்ளிகள்)

06) அ) மத்திய காலத்தில் திருச்சபை பிளவுபட்டதற்கான காரணத்தை ஐந்து விடயங்கள் மூலம் விளக்குக.

ஆ) மாட்டின் லூத்தரின் வாதத்தில் காணப்படும் கருத்துக்கள் ஐந்தினை விளக்குக.

($2 \times 10 = 20$ புள்ளிகள்)

07) அ) யோசவாஸ் அடிகளார் இலங்கையில் ஆற்றிய அர்ப்பணிப்பான பணியினை விளக்குக.

ஆ) இன்று திருச்சபை எதிர்நோக்கும் சவால்கள் மத்தியில் நீர் எவ்வாறு மறைபரப்பு பணியில் ஈடுபடுவீர் என விளக்குக.

($2 \times 10 = 20$ புள்ளிகள்)

08) அ) நிசேயா பொதுச்சங்கம் கூட்ட ஏதுவான காரணத்தை விளக்குக.

ஆ) நிசேயா பொதுச் சங்கத்தை கூட்டியதால் கத்தோலிக்க திருச்சபையின் எதிர்பார்ப்பு எவ்வாறு கைகூடியது என்பதனை விளக்குக.

($2 \times 10 = 20$ புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education